DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw26 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.டேனியல் ராஜாசிங் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் மோப்பநாய் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 13.08.2015 அன்று நான் பணியில் இருக்கும்போது பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் தகவலின் பேரில் குற்ற எண்.608/2015 பிரிவுகள் 302, 201 இ.த.ச. வழக்கில் நானும் என்னுடன் முதல்நிலை காவலர் மகேந்திரன் குமார் என்பவரும் காவல் துப்பறியும் மோப்பநாய் புளுட்டோவுடன் பாளையங்கோட்டை காவல் நிலை எல்கைக்குட்பட்ட திம்மராஜபுரம் பைபாஸ் கீழ்புறம்

கீழநத்தம் ரோட்டின் மேல்பக்கம் முறிக்குளம் கரையின் வடகிழக்கு மூலையில் கிடந்த இரத்த கறையில் மோப்பநாய் புளுட்டோ மோப்பம் செய்ததில் அந்த இடத்தில்இருந்து மேற்கு பக்கமாக வந்து பைபாஸில் சுமார் 1 கி.மீ. தூரம் மோப்பம் செய்து ஓடி மறுபடியும் அதே இடத்திற்கு வந்து நின்றது. காலை 10.15 முதல் 12 மணிக்குள் மேற்படி நடவடிக்கை முடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பாளையங்கோட்டை காவல் ஆய்வாளிடம்இருந்து எனக்கு நேரடியாக தகவல் வரவில்லை என்றால் சரிதான். எங்கள் உதவி ஆய்வாளருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. எழுத்து மூலமாக தகவல் வரவில்லை. என்ன அலைபேசியின் எண்ணிற்கு தகவல் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. எங்களுக்கு தகவல் கொடுக்கப்பட்ட விவரம் அலுவலக பொது நாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். தகவல் கிடைத்த உடன் நானும் முதல்நிலை காவல் மகேந்திர குமாரும் சம்பவ இடம் சென்றோம். இரத்த கறை படிந்த இடத்திலிருந்து நாய் சுமார் 1 கி.மீ. தூரம் ஓடியது. 1 1/4 மணி நேரத்தில் நாய் 1 கி.மீ. தூரம் தான் ஓடியது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக நாய் எந்தவொரு தடயமும் கண்டறியவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது எங்கள் அலுவலக பொதுநாட்குறிப்பை கைபற்றி விசாரித்தாரா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அன்றைய தினம் எனக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் நானும் மகேந்திர குமாரும் மோப்ப நாயுடன் இரத்த கறைபடிந்த இடத்திற்கு சென்றதாகவும் அங்கு மோப்ப நாய் சுமார் 1 கி.மீ. தூரம் ஓடி திரும்ப அதே இடத்திற்கு வந்ததாகவும் இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw27 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.நூருல்ஹக் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 27.08.2015ம் தேதி பாளையங்கோட்டை காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று 14.30 மணிக்கு திருநெல்வேலி குற்றவியல் நடுவர் எண்.1 அவர்களின் உத்தரவின்பேரில் நிலைய குற்ற எண்.608/2015 பிரிவுகள் 302, 201 இ.த.ச. வழக்கில் மற்றும் கிரைம் நம்பர் எண்.610/2015 பிரிவுகள் 302 இ.த.ச. வழக்கில் பிரேத பரிசோதனையின் போது

கைப்பற்றப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பெற்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்விற்காக நான் ஒப்படைத்தேன். உடல் உள்ளுறுப்புகளை ஒப்படைத்தற்கான ஒப்புகைச்சீட்டை பெற்று மீண்டும் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் மற்றும் அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஒப்புகைச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன். அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். பாளையங்கோட்டை காவல் ஆய்வாளரிடம் சொன்னதைத் தான் அச்சன்புதூர் காவல் ஆய்வாளரிடமும் நான் சொன்னேன். தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வு சம்பந்தமாக அறிக்கை எதுவும் என்னிடம் தரப்படவில்லை. ரசீது மட்டும் தான் தரப்பட்டது. நான் மேற்கொண்ட பணிக்காக எனக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டை பாளையங்கோட்டை காவல் ஆய்வாளரிடம் பெற்றேன். நான் பணி மேற்கொண்டது சம்பந்தமாக எங்கள் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் துலங்கும் என்றால்சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது பொய் என்றும் மேல்அதிகாரிகளின் உத்தரவின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw28 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.சொர்ணம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று விட்டேன். கடந்த 13.08.2015 ம் தேதி பாளையங்கோட்டை காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில்இருந்த போது நிலைய குற்ற எண்.608/2015 சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச. வழக்கில் கொலையுண்டு இறந்து போன இராஜகோபால் என்ற சண்டியர் என்பவரது தலையில்லாத பிரேதத்தினை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன்.

அன்றைய தினம் பிரேத பரிசோதனை செய்ய இயலவில்லை. மறுநாள் பிரேத பரிசோதனைக்கு பின்னர் ராஜகோபால் என்ற சண்டியரின் சடலத்தை அவரது உறவினர்கள்வசம் ஒப்படைத்தேன். மேற்படி சடலத்திலிருந்து ஒரு ஜட்டி, ஒரு பனியன், ஒரு சட்டை ஆகியவை பாதி எறிந்தநிலையில் இருந்தவற்றை கைப்பற்றி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் மேற்கொண்ட பணிக்காக எனக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை பணி முடித்த பின்னர் எத்தனை நாட்களில்இருந்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் எனக்கு அது நினைவில்லை. நான் கைப்பற்றிய ஒரு ஜட்டி, ஒரு பனியன், ஒரு சட்டை ஆகியவற்றை நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். நான் செய்த பணி குறித்த விவரம் எங்கள் காவல்நிலைய பொது நாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது காவல்நிலைய பொது நாட்குறிப்பை கைப்பற்றி விசாரித்தார் என்றால் சரிதான். மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு ஒப்படைத்த போது எழுத்து மூலமாக மறுப்பு கடிதம் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். நான் 13.08.2015 அன்று அரசு மருத்துமனைக்கு சடலத்தை கொண்டு சென்றதாக சொல்வதும் மறுநாள் பிரேத விசாரணைக்கு பின்னர் ஒரு ஜட்டி, ஒரு பனியன், ஒரு சட்டை ஆகியவற்றை கைபற்றியதாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கொலையுண்டு இறந்து போனவரின் சடலத்தை கைபற்றுவதில் ஏற்பட்ட காலதாமத்தை மறைப்பதற்காக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்சொன்னது போல் எந்தவொரு ஆடையும் பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | **S.C.No.745/2017** |
| Depositions of Witness for | | Prosecution Pw29 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.ஆறுமுகம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 14/08/2015 ம் தேதி நான் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண்.608/2015 சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச. வழக்கு மற்றும் குற்ற எண்.610/2015 வழக்குகளில் பிரேத விசாரணை அறிக்கையை காவல் நிலையத்தில் பெற்று திருநெல்வேலி குற்றவியல் நடுவர் எண்.1 அவர்கள் வசம்

ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் பிரேத விசாரணை அறிக்கையை காவல் நிலையத்தில் மதியம் 3 மணியளவில் பெற்றேன். எத்தனை மணிக்கு நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் உடனே ஒப்படைத்தேன். நான்செய்த பணிக்கு கடவுச் சீட்டு வழங்கப்பட்டது. நான் சொன்னதுபோல் சொன்ன நாளில் பிரேத விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

Depositions of Witness for Prosecution Pw30
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இராஜேந்திரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12/08/2015 ம் தேதி இரவு 21.30 மணிக்கு நெடுவயல் சிவகாமியாபுரம் காலனி, இராஜகோபால் என்ற சண்டியர் மனைவி லட்சுமி, வயது 37 என்பவர் அச்சன்புதூர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.222/2015 சட்டப்பிரிவுகள் 147, 323, 365 இ.த.ச. படி ஒரு வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு

முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 21** ஆகும். அதன் அசல் நகலையும் புகார் மனுவையும் கனம் செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னிடம் புகார் கொடுக்க வரும்போது அ.சா. 1 தனியாக வந்தாரா அல்லது உடன் ஆட்களை அழைத்து வந்தாரா என்றால் அது குறித்து எனக்கு நினைவில்லை. அ.சா.1 எழுத்து மூலமான புகார் தான் கொடுத்தார். அந்த புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. அச்சு முதல் தகவல் அறிக்கையில் 15 வது காலத்தில் இவ்வழக்கில் எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்பது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும் உரிய நேரத்தில் நீதிமன்றம் அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரில் குற்றவாளி யார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

Depositions of Witness for Prosecution Pw31
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தர்மலிங்கம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2024.

**(A4 absent. Petition filed and allowed. Others present)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பாளையங்கோட்டை காவல்நிலையத்தில் எழுத்தராக பணியில் இருந்த போது கடந்த 13/08/2015 ம் தேதி காலை 9 மணியளவில் திம்மராஜபுரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பரமேஸ்வரி அவர்களுடன் கிராம உதவியாளர் திரு.வேம்பன் ஆகியோர் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவை கொடுத்தார்கள். நான் அந்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப பாளையங்கோட்டை நிலைய குற்ற எண்.608/2015

சட்டப்பிரிவுகள் 302, 201 இ.த.ச. வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 22** ஆகும். வாதியின் புகார் மற்றும் அசல் முதல் தகவல் அறிக்கையை திருநெல்வேலி குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பினேன். ஒரு நகலை விசாரணைக்காக பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு வகித்த மேலப்பாளையம் காவல் ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். அச்சு முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

அதே தினம் 19.30 மணிக்கு திம்மராஜபுரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பரமேஸ்வரி அவர்களுடன் கிராம உதவியாளர் திரு.வேம்பன் ஆகியோர் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவை கொடுத்தார்கள். நான் அந்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப பாளையங்கோட்டை நிலைய குற்ற எண்.610/2015 சட்டப்பிரிவுகள் 302 இ.த.ச. (சந்தேக மரணம்) என வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 23** ஆகும். வாதியின் புகார் மற்றும் அசல் முதல் தகவல் அறிக்கையை திருநெல்வேலி குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பினேன். விசாரணை நகலை பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் திரு.தில்லை நாகராஜன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். அச்சு முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

குற்ற எண்.610/2015 வழக்கில் 13.08.2015 அன்று கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் புகார் கொடுத்த போது எங்கள் காவல் நிலைய எழுத்தராக இருந்தேன். அந்த புகாரில் சந்தேக மரணம் என்று தான் குறிப்பிட்டிருந்தார்கள்.

குற்ற எண்.608/2015 வழக்கில் காலம் எண்.8 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதியும் நேரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றும் சொன்ன நேரத்தில் வழக்கின் தன்மைக்கு ஏற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்கொண்ட பணிக்கு கடவுச் சீட்டு கொடுக்கப்படவில்லை. நான் செய்த பணி குறித்த விவரம் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். என்னை 3 காவல் ஆய்வாளர்களும் விசாரித்தார்கள். நான் சொன்ன விவரங்களை 3 காவல் ஆய்வாளர்களும் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் உண்மையில்லை என்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**